**JUDICIAL FORM. 53**
**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII–Code of Criminal Procedure)**
**IN THE COURT OF DISTRICT MUNSIF –CUM– JUDICIAL MAGISTRATE, KOTAGIRI**

**Case No.C.C.No. 28/2025**

**Deposition of Witness for Complainant PW1 (LW1)**

| | | |
|---|---|---|
| **Name** | : | அருண் |
| **Father's Name** | : | குமார் |
| **Village** | : | குன்னூர் |
| **Taluk** | : | குன்னூர் |
| **Calling** | : | நகர துணை வட்டாட்சியர் |
| **Age** | : | 40 |

**Solemnly affirmed in accordance with the provisions of act x of 1873 on this day of**

**10.11.2025** **Witness Signature :**

**புகார்தாரர் மற்றும் எதிரிகள் ஆஜர்.**

**முதல் விசாரணை 11.16 A.M (சாட்சியை கோத்தகிரி தலைமைக் காவலர் எண் 158 திரு. எம். மனோகரன் அவர்களால் அடையாளம் காட்டப்பட்டார்.**

1. நான் தற்போது உதகை வட்டாட்சியர் அலுவலகத்தில் நகர துணை வட்டாட்சியராக பணியிலிருந்து வருகிறேன். கடந்த 31.03.2023 ம் தேதி மாலை சுமார் 6.30 மணியளவில் நானும், கிராம நிர்வாக அலுவலர் திரு. மேகவர்மன் பிரபாகரன் அவர்களும் புல தணிக்கை செய்ய ஜக்கனாரை வாட்டர் பால்ஸ் என்ற இடத்திற்கு சென்றிருந்தோம். அப்பொழுது அங்கு பாலமுருகன் என்பவருக்கு சொந்தமான பட்டா

நிலத்தில் காவிலுரையை சேர்ந்த ஆனந்த் என்பவருக்கு சொந்தமான கொப்பட்டா வாகனத்தை பயன்படுத்தி மண்ணெடுப்பு வேலை செய்து கொண்டிருந்தவர்களை பார்த்து உங்கள் பெயர் என்ன என்று கேட்டதற்கு ஆஜர் எதிரிகள் வேம்புராஜ், தினேஷ் என்று கூறினார்கள். அவரிடம் கொப்பட்டா வாகனத்தை இயக்க அனுமதி உள்ளதா? என்று கடிதத்தை கேட்டபோது நீ யார் டா புண்டை என்று கெட்ட வார்த்தையால் திட்டி, என்னை அடித்து கீழே தள்ளிவிட்டார்கள்.

2. நாங்கள் சாவியை கேட்டதற்கு சாவியை கொடுக்காமல் வாகனத்திலிருந்த இரும்பு கம்பியை எடுத்து தாக்க வந்தார்கள். நானும், அந்த கிராம நிர்வாக அலுவலரும் அங்கிருந்து தப்பித்து வந்தோம். பின்னர் கோத்தகிரி காவல் நிலையம் வந்து எங்களை அரசு பணியை செய்து விடாமல் தடுத்தும், கெட்டவார்த்தையால் பேசியும், கையால் அடித்த நபர்கள் மீது புகார் கொடுத்தேன். தற்போது என்னிடம் காட்டப்படும் புகார் என்னுடையது தான். அந்த புகார் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

3. தற்போது என்னிடம் காண்பிக்கபடும் இரும்புகம்பி டுல்ஸ் ஆல் தான் என்னை அடிக்க வந்தார்கள். இந்த இரும்புகம்பி அ.சா.பொ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. இந்த வழக்கு சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

1. போதிய வாய்ப்பளித்தும் குறுக்கு விசாரணை செய்யாததால் குறுக்கு விசாரணை இத்துடன் முடிக்கப்படுகிறது.

**Taken down by/before me in open court read over/ interpreted to the witness in the presence of the accused/ accused's pleader and admitted by the witness to be correct.**

**Sd/- G. Amirdham, 10.11.2025**
**Judicial Magistrate,**
**Kotagiri**